அரூர் வட்டத்தில் ஏரிகள் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 75—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அரூர் வட்டம் தீர்த்தமலை பிர்க்கா, பெரியப்பட்டி தாப்பு ஓடமணியங்குட்டை, ஏரிப்பள்ளம், எலந்தக்குட்டை, புள்ளபுதைச்சன் குட்டை, கன்னிமா கோயில் ஓடை, எருப்பு தோட்டப்பள்ளம் ஆகிய இடங்களில் ஏரிகள் அமைக்கும் திட்டம் ஏதும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அரூர் வட்டம், தீர்த்தமலை பிர்க்கா, சிக்கலூர் கிராமம் அருகே ஓர் குட்டை கட்டும் திட்டம் தல அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது. இதனை தவிர்த்து வேறு எந்தத் திட்டமும் பரிசீலனையில் இல்லை.

திரு. எம். அண்ணாமலை: அரூர் வட்டம், தீர்த்தமலை பிர்க்கா, சிக்கலூர் கிராமம் அருகே குட்டை கட்டும் திட்டம் ஆய்விலுள்ளதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கு ஆறு கிராமங்களில் அவ்வாறு குட்டைகள் கட்ட வேண்டும். அந்த ஏரியாவில் பாசனத்திற்கு வாய்ப்பு இல்லாத காரணத்தால் சிறு குட்டைகள் கட்டினால் கூடப் போதும். அந்த ஏரியாவில் குட்டைகள் கட்டிக் கொடுப்பது பற்றிப் பரிசீலிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அரசு பரிசீலிக்கும்.

Arrears from New Horizen Company, Arjyur.

*Q. No. 76—Thiru N. KITTAPPA: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state:

(a) Whether a large amount of money is due to Tamil Nadu State from Messrs New Horizan Sugar Mills Limited, Arjyur in Pondicherry State; and

(b) the steps taken to recover the amounts?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டு அரசுக்குச் சேரவேண்டிய கரும்பு மேல் வரி நிலுவையை விரைவில் கொடுக்கும்படி பாண்டிச்சேரி அரசின் தலைமைச் செயலர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். அரசு நிலுவையை விரைவில் வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது.